**<u>சுருக்கம்</u>**

வீட்டுவசதி – தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் – தமிழக அரசால் கடந்த 2004ஆம் ஆண்டு முதல் பல்வேறு கால கட்டங்களில் முதன்மை சங்கங்களில் கடன் பெற்று தவணை தவறிய உறுப்பினர்களுக்கு தள்ளுபடி சலுகைகள் வழங்கியது – தவணை தவறிய உறுப்பினர்கள் கடனை செலுத்த முன்வருபவர்களுக்கு தவணை தவறிய தொகைக்கான வட்டி மற்றும் தவணை தவறிய அபராத வட்டியினை முழுமையாக தள்ளுபடி செய்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

= = = == = == = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = =

**<u>வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(வீகூ.ச.1)துறை</u>**

**அரசாணை (நிலை) எண்.40** **நாள் :16. 03.2015.**

**ஜய வருடம் பங்குனி 2,**

**திருவள்ளுவர் ஆண்டு 2046**

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) கடித ந.க.எண்.5686/2014/ஆ3, நாள் 21.01.2015.

= = = = =

**<u>ஆணை :</u>**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்கள் இதர விவரங்களுடன், முதன்மை சங்கங்களில் கடன் வசூல் நாளுக்கு நாள் குறைந்து தவணை தொகைகள் அதிகரித்து கொண்டு வரும் நிலையில் உள்ளது. இந்நிலையில் சங்கங்களில் கடன் வசூல் குறைவாக உள்ளதால் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் நிதி நிறுவனங்கள்/வங்கிகளுக்கு குறித்த காலத்தில் தவணைத் தொகை செலுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் நிதி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய தவணைத் தொகைக்கு கடன் வசூல் இல்லாத காரணத்தால் அரசிடம் வழிவகை கடன் வழங்குமாறு கோரிக்கை வைக்கப்பட்டதன் அடிப்படையில் இணையம் 30.09.2014 முடிய தவணைத் தொகையான ரூ.40.00கோடியினை 31.12.2014க்குள் செலுத்த இயலாத காரணத்தால் நிதிநிறுவனங்கள்/வங்கிகள் செயல்படாத சொத்துக்களாக (NPA) அறிவிக்கப்படக்கூடிய சூழ்நிலையினை தவிர்க்கும்பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு 13.50 விழுக்காடு வட்டியில் ரூ.40.00கோடி வழிவகை கடன் (Ways and Means) அனுமதித்து இவ்வழிவகை கடனை 31.03.2015க்குள் செலுத்தப்படவேண்டும் என்றும், இனிவரும் காலங்களுக்கு அரசு வழிவகை கடன் வழங்க இயலாது என்ற நிபந்தனை விதித்து ரூ.40.00கோடி தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு 14.1.2015ஆம் நாளிட்ட அரசாணை(நிலை) எண்.4 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீகூ.ச.1)துறையின்படி அரசு வழிவகை கடன் வழங்கியுள்ளது. இணையம், அரசு வழிவகை கடன் ரூ.40.00 கோடியுடன், அக்டோபர் முதல் டிசம்பர் 2014 வரையிலான மூன்றாம் காலாண்டிற்கு ரூ.36.96கோடியும், ஜனவரி 2015 முதல் மார்ச் 2015 முடிய ரூ.42.18 கோடியும், ஆகமொத்தம் ரூ.119.14 கோடி இணையம் அரசு/ நிதி நிறுவனங்கள்/ வங்கிகளுக்கு 31.03.2015க்குள் செலுத்தப்பட வேண்டும். முதன்மை சங்கங்களில் 74,314 தவணை

தவறிய கடன்தாரர்களிடம் 31.12.2014ஆம் தேதி வரை கீழ்க்கண்டவாறு தவணை தவறிய தொகைகள் வசூல் செய்யப்படவேண்டியுள்ளது:–

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| 1 | தவணை தவறிய அசல் | 679.06 |
| 2 | தவணை தவறிய வட்டி | 653.08 |
| 3 | தவணை தவறிய தொகைக்கான வட்டி | 245.94 |
| 4 | தவணை தவறிய அபராத வட்டி | 507.62 |
| | **மொத்தம்** | 2085.70 |

2. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) மேலும் தெரிவிக்கையில், முதன்மை சங்கங்களிடம் தவணை தவறிய கடன்தாரர்களிடம் கடன் வசூல் செய்வதற்கு கடந்த காலங்களில் தள்ளுபடி திட்டங்கள் அறிவிக்கப்பட்டு கடன் வசூல் செய்யப்பட்டுள்ளதால் கடன்தாரர்கள் முழுமையாக தள்ளுபடி செய்வார்கள் என்ற மனநிலையில் உள்ளனர் எனவும், இதனால் வசதி வாய்ப்புகள் இருந்தும் தவணை தொகைகள் செலுத்த முன்வராததால் முதன்மை சங்கங்கள் அளவில் தவணை தவறிய கடன்தாரர்கள் அதிகரித்துள்ளனர் என இணைய மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார் எனவும், மேலும், முதன்மைச் சங்கங்களில் 31.12.2014ல் தவணை தவறிய 74,314 கடன்தாரர்களுக்கு அசல் மற்றும் வட்டி ரூ.1,332.14 கோடி உள்ளது. இத்தொகையினை வசூல் செய்வதற்கு சில நடவடிக்கைகள் மேற்கொள்வது என முடிவெடுக்கப்பட்டுள்ளது எனவும், அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் உத்தேசமாக ரூ.400.00 கோடி தவணை தவறிய கடன்தாரர்களிடம் வசூல் செய்ய வாய்ப்புள்ளது. இத்தொகையினை வசூல் செய்வதற்கு தற்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு பொறுப்பில் உள்ளதால் இக்கடன் தொகையினை வசூல் செய்திட இயலும். இதனால் இணையம், அரசு/ வணிக வங்கிகள்/ நிதி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய ரூ.119.14 கோடியினை அரசின் நிதியுதவி இல்லாமல் செலுத்த இயல்வதோடு, இணையம் மீண்டும் முதன்மை சங்கங்களுக்கு கடன் வழங்கி புத்துயிர் வழங்க இயலும் எனவும், அரசு ஏற்கனவே அறிவித்த பல்வேறு தள்ளுபடி சலுகையில் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் அபராத வட்டி தொகையினை கூட்டுறவு அமைப்புகளே ஏற்றுக்கொள்ள வேண்டும் என அரசு தெரிவித்துள்ளதற்கு ஏற்ப, அபராத வட்டி தொகையில் 11 சதவிகிதம் இணையமும், மீதம் 1 சதவிகிதம் முதன்மை சங்கங்களும் ஏற்று கொண்டுள்ளன. அபராத வட்டியினை கூட்டுறவு அமைப்புகளே ஏற்றுக்கொள்வதால் அரசிற்கு நிதிச்சுமை ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3. இணைய அளவில் முதன்மை சங்கங்களுக்கு 31.12.2013க்கு முன் வழங்கிய குறைந்த, நடுத்தர மற்றும் உயர் வருவாய் பிரிவு / அடமானக் கடன்கள்/ திட்டக்கடன்கள்/ மனைப்பிரிவு கடன்களுக்கு முதன்மை சங்கங்களில் தவணை தவறிய கடன்தாரர்களிடம் தவணை தவறிய அசல் மற்றும் வட்டியினை வசூல் செய்ய கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 1983 சட்டப்பிரிவு 143–ன்படி கீழ்க்கண்ட நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாக கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்(வீட்டுவசதி) தெரிவித்துள்ளார் :–

(i) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 1983 ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 143ன்படி தவணை தவறிய அனைத்து கடன்தாரர்கள் மீதும் முறையாக சட்டப் பூர்வ நடவடிக்கை மேற்கொள்வது.

(ii) அவ்வாறு சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளும்போது, தவணை தவறிய கடன்தாரர்களிடமிருந்து, சட்டப் பூர்வ நடவடிக்கையினை முற்றிலுமாக தவிர்த்திடவும் வட்டித் தள்ளுபடி உட்பட அரசுக்கு கோரிக்கைகள் வர வாய்ப்புள்ளது.

(iii) அவ்வாறு கோரிக்கைகள் வரும் பட்சத்தில், சட்டபூர்வ நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் கடன்தாரர்கள் தங்களது தவணை தவறிய அசல் மற்றும் வட்டியினை செலுத்த முன்வருபவர்களுக்கு தவணை தவறிய தொகைக்கான வட்டி மற்றும் தவணை தவறிய அபராத வட்டியினை முழுமையாக தள்ளுபடி செய்யலாம்.

(iv) மேற்படி சலுகை வழங்கப்பட்டும் தவணை தவறிய தொகைகளை செலுத்த முன்வராத தவணை தவறிய கடன்தாரர்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கை மூலம் கடன் கணக்கினை முடிவு கட்டி கடனுக்கு தொடர்பான அவர்களது சொத்தினை கையகப்படுத்தலாம்.

4. எனவே, தவணை தவறிய கடன்தாரர்களிடம் தவணை தவறிய தொகையினை வசூல் செய்வதற்கு மேலே பத்தி–4 வரிசை எண் (iii)–ல் குறிப்பிட்டுள்ளபடி தவணை தவறிய தொகைக்கான வட்டி மற்றும் தவணை தவறிய அபராத வட்டியினை முழுமையாக தள்ளுபடி செய்யக் கோரியும், மேலும் சங்கக் கடன்களை உடனுக்குடன் திருப்பி செலுத்தும் உறுப்பினர்களுக்கு கடன் பத்திரங்கள் உடன் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ள தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் கோரிக்கை மீது தக்க ஆணை வேண்டி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்(வீட்டுவசதி) அவர்கள் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

5. மேலே பத்தி 4ல் உள்ள கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்விற்குப்பின், சட்டப்பூர்வ நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் கடன்தாரர்கள் தங்களது தவணை தவறிய அசல் மற்றும் வட்டியினை செலுத்த முன் வருபவர்களுக்கு தவணை தவறிய தொகைக்கான வட்டி மற்றும் தவணை தவறிய அபராத வட்டியினை முழுமையாக தள்ளுபடி செய்து அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தர்மேந்திர பிரதாப் யாதவ்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி),
நந்தனம், சென்னை – 35.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்,
வேப்பேரி, சென்னை–7.
நகல் :
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மை)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்(வீட்டுவசதி) துறை, சென்னை–9.
அரசு செயலாளரின் தனிச் செயலர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை–9.
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (அநமு.1) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**